அதற்கு மாருக பலவிதத்திலும் வேற்று விதமான தீர்ப்பானது ஏற்பட்டிருக்கிறது என்று பல பகுதிகளிலே இன்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் பதவி ஏற்ற பிறகுதான் இந்த மாதிரியான காரியங்களைச் செய்திருக்கிருர்கள்.

இந்த அரசாங்கம் வந்தவுடன் பதநீர் இறக்க லைசென்ஸ் வாங்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அதற்கு 50 ரூபாய் லைசென்ஸ் கட்ட வேண்டுமென்றிருப்பதை எடுத்துவிட வேண்டுமென்று பல பகுதிகளில் இருந்தும் கடிதங்கள் அனுப்பினுர்கள். இந்த உத்தரவு எங்கள் பக்கத்தில் இருப்பவர்களைப் பெருமளவில் பாதித்திருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: அந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டு 7, 8 நாட்களுக்கு மேலாகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இன்னெரு விஷயம். எங்கள் பகுதியைச் சார்ந்தவர்களை சென்னையில் கண்டக்டர்களாகத் தேர்வு செய்வதில்லை. இதைப் பற்றிப் பலமுறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறேன். நீங்கள் தனிக் கொடி எல்லாம் கேட்பது போல் ஒருவேளை நாங்களும் தனி ராஜ்யம் கேட்க வேண்டுமென்ற அளவுக்கு நிர்ப்பந்தப்படுத்துவது போல் இருக்கிறது. கன்னியாகுமரி ஜில்லாவில் இருந்து வந்தால் மலையாளியாக இருக்கிருர், அல்லது மலையாளம் கற்றிருக்கிருர் என்ற காரணத்திற்காகப் புறக்கணிக்கப்படுவது அரசியலமைப்புச் சட்டத்திற்கே விரோதமானது. புறம்பானது என்ற கூற விரும்புகிறேன்.

பிஃபீல்டுமென் பல .நாட்களாக உண்ணுவிரதம் இருக்கிருர்கள் (குறுக்கீடு) அதைப் பற்றி ரூல் 41 மோஷன் கொடுத்திருக்கிறேன். அவர்களுடைய உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. உடனடியாக அதிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். உயிரோடு போராடிக் கொண்டிருக்கின்ற அவர்களுக்கு உடனடியாக நிவாரணம் செய்யப்படவில்லையானுல் உயிர் நீக்கும் நிலைமையில் இருக்கிருர்கள். அதிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அரசாங்கத்தின்மீதும், அமைச்சரவைமீதும் நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

இரவு 7-25 **மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல்கள் இன்று இந்த அளவோடு முடிவடைந்து மீண்டும் நாளைக் காலை 9 மணிக்கு பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

10. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள் —

A. *Statutory Rules and Orders.*

@ 282. Notification issued with G.O. Ms. No. 202, Public (Services-A), dated the 3rd February 1970 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 published at pages 759 to 768 of Part I of the Tamil Nadu